விநாயகர் துணை.

# [illegible] …றியூர்வெண்பா

மூலம்.

[illegible] - சித்திரகவி

[illegible] …கவிராஜரவர்களால்

இயற்றியன.

[illegible]

[illegible] …பிள்ளை அவர்கள்

[illegible] …த்தின்படி,

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

1897

[illegible]

# சாத்துகவி.

மா-ா-ா-ஸ்ரீ வித்வான் புரசை அஷ்டாவதானம்

சபாபதிமுதலியா ரவர்களால்

இயற்றிய

கழிநெடில்விருத்தம்.

சத்தியினாலெவ்வுலகும் புரந்தானைக்குணாலயதந்
தியையுளித்த
உத்தியினாலொளிர்பணியான திருவொற்றியூர்வெண்பா
மாலையொன்று
பத்தியினாற்கந்தசுவா மிக்குரிசில்பகாந்தனனாறன
பரிவுநோக்கிச்
சித்தியினாற்பெரியதமிழ்த்துறைவல்லோர்முனிவகத்திற்
செய்யாரென்றே.

சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப்புலவர்

கோமளபுரம்

இராசகோபாலபிள்ளையவர்களால்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம.

மருவொற்றிளம்பெடைவண் டுரைப்பவருதென்றலுலாம்
வளக்காச்சூழும்
திருவொற்றியூர்வெண்பா செயதனனறகலவினி
தேர்ந்தக்கூற்றில்
ருவொற்றிலாதவைதான் ியறறவல்லகந்தசுவா
மிப்பேர்வள்ளல்
ருவொற்றியியல்வினையைக கடியுமாறுளமதிற்
கருதிமாதோ.

ம-ா-ா-ஸ்ரீ-கா-பச்சையப்பமுதலியார்

சென்னை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

திருமணம்

## கேசவசுப்பராய முதலியாரவர்களால்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கொண்டல்வண்ணத்திருமாலை யலங்கரிக்குந்துழாய்மாலை
குலையாதிறகப்
புண்டரிகத்தயனணிபூ னூன்மாலைகலையாகப்
பொருந்தஞ்செய்யத்
தண்டலையார்கோரஞ்சூ ழூர்க்கந்தசுவாமிபுனை
தமிழ்மாலைக்கே
அண்டர்பிரான்றியாகேச ரணிமாலையுங்கடுக்கை
யாயதம்மா

இந்நூற்கவிராஜரவர்களின் ஆசிரியராகிய

ம-ா-ா-ஸ்ரீ - திருமயிலை

## ஆ. அண்ணுசுவாமிகவிராஜரவர்களால்

இயற்றிய அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருக்கோரஞ்சூழூரிற்கந்தசுவாமிக்கவிஞன்
செய்தவான்க
திருக்கோரஞ்செல்பொழில்சூ ழொற்றியூர்த்தியாகர்
வெண்பாத் திறத்தைக்கண்டோர்
திருக்கோரஞ்சிறிதுளையார் புவிசிரசன்வாணனுடனெ
மலைதாப
திருக்கோரஞ்சுவர்க்கமென்றேசிரகரம்வாய்சித்தமதாற்
றெளிவர்தாமே,

உ

குணாலயவிநாயகர் துணை.

# திருவொற்றியூர் வெண்பா

## கணபதி காப்பு.

மின்னு மதியளவி மேவுபொழி லொற்றிநகர்
பன்னுவெண்பா நாவாற் பகருவா—மன்னுக்
கீணாலயனி லாவுமுயர் தற்பரனார் தந்த
குணாலயக ணேசரருட் கொண்டு.

## முருகர்துதி.

சீர்வெண் கதிர்தாவுந் தேம்பொழில்சூழ் தென்னொற்றி
யூர்வெண்பா மாலைசொல வுன்னுவாம்—நேரா
வருகன் றுணையடியார் வாழ்த்துதிருப் போரூர்
முருகன் றுணையடியா முன்.

## வடிவுடையம்மைதுதி.

தம்பொழில்சூ ழொற்றித் திருவெண்பா நாவினு
ஞமைபுகல வேதுணையாய் நண்ணுமால்—பாம்பின்
முடிவாம் பிரபஞ்ச முன்ன மளித்த
வடிவாம் பிகைத்தாண் மலர்.

## அவையடக்கம்.

நறும்பொழில்சூ ழொற்றிவெண்பா நாமுரைப்ப தெவ்வா
றெறும்பத்தி நீருண்ப தெய்துங்—குறுமுனிசொற்
செந்தமிழார் வாணரின்றன் செய்யசமு கத்தின்முன்
சொங்க விழாமற் றொடுத்து.

## நூல்.

சீர்பதும கற்பவெள்ளஞ் சேரயன்யோ கத்தீயா
லோர்புடையொ திசுகிவாந்த வொற்றியே—யோர்பரவும்
எண்ணுந் தியாக ரெழில்பதத்தில் வைப்பவருள்
நண்ணுந் தியாகர் நகர். (க)

தேவா சிரியரொடு சீர்நந்தி யார்களிக்க
மேவாத மாநடஞ்செ யொற்றியே—நாவாற்
றுதித்தார் தனையந் தொலைப்பான்வேய் தந்த
மதித்தார் தனையன் மனை. (உ)

மிக்கவாற் கீழ்முனிவர் வேண்டவருள் செய்பரம
னெக்கவத்தி நீழலிலா ரொற்றியே—தக்கமுடி
மீதார விந்தத்தன் வேண்டுவரந் தந்தருளும்
பாதார விந்தத்தன் பற்று. (௩)

வேதியற்கு முன்றோன்றி மேன்மைபெறும் யோகநெறி
யோதி மறைந்தருளு மொற்றியே—போதவென்முன்
வந்தாளு மையன் வடிவேல னைங்கரனைத்
தந்தாளு மையன் றலம். (௪)

வண்மைக் கலைவாணி வாழ்நிருதிப் பொய்கைதனி
லுண்மைத் தவஞ்செய்யு மொற்றியே—வெண்க
திருமக் கலையார்ந் திடுமுடியார் வேங்கைச்
சருமக் கலையார் தலம். (௫)

வாகைநெடு மாற்கன்று வைகுந்தங் கண்டநட
மோகையுடன் காட்டுமெழி லொற்றியே-மேகவண்ணன்
றுங்கக் கணையர் துகடீர்ந்த தீமதிப
தங்கக் கணையர் தலம். (௬)

வாணற் றரங்கத்தில் வந்தமுத னூல்முனம்வைத்
தோணத்தன் கொண்டாடு மொற்றியே—பாணமெனுந்
தூயச் சுதனூர் துதிகழலார் வேய்தோன்று
மாயச் சுதனூர் மனை. (௭)

நற்பா ணினிபகவ னண்ணவி யாகரண
முற்பாத னீங்கவுற்ற வொற்றியே—பொற்பாக
நந்தா னனத்த னவில்பாதன் கொன்றையவி
ரைந்தா னனத்த னகம். (௮)

பத்திசெயும் வான்மீகப் பண்ணவற்குப் பல்வாத்தை
யுத்தமமாய்த் தந்தருளு மொற்றியே—யத்தி
யுருவத் திரத்தா ருயர்தந்தை கண்ணன்
மருவத் திரத்தார் மனை. (௯)

சீரா வுவந்தேத்தி சேடனார் தன்றலையை
யோரா யிரந்தாழ்த்து மொற்றியே—நேராக
வென்னையனை வந்தா னிளாதவோர் மாதின்மு
ன்னையனை வந்தா னகம். (௧௦)

வாகையுட னேதொண்ட மான்சக்ர வர்த்திசெறிந்
தோகையொடு தாழ்ந்திறைஞ்சு மொற்றியே—தோகை
மேவா கனத்தன் விரிஞ்சன பணிவெங்கண் [யுமை
மேவா கனத்தன் செறிவு. (௧௧)

வண்மலிய வேத்து மறையோ ரிருவர்களுக்
கொண்மணிய ளித்தாண்ட வொற்றியே—தண்மலரான்
பூவஞ் சமத்தன் பொலியாக னன்பருள
மேவஞ் சமத்தன் விருப்பு. (௧௨)

வண்வாவி யின்மூழ்கி மாந்தா நரைதிரைபோ
யொண்வாலி பதந்த வொற்றியே---தண்பாவுந்
தேனார் கமலத்தன் றேடரியான் செங்கைமுடி
மானார் கமலத்தன் வாழ்வு. (௧௩)

நீடுமன்பாற் போ[illegible]கொண்டு நீங்காமற் சேடனா
ரோடுமதி யின்றுதிசெ யொற்றியே—வாடனுகோற்
சங்காழிக் கையன் சதுர்முகனா ரேத்தமகி
ழங்காழிக் கைய னகம். (௧௪)

பண்டருளும் வாய்மைப் படிமணக்கோ லம்புணரி
யுண்டமுனி கண்டுவந்த வொற்றியே—புண்டரிகன்

வண்ணம் புயத்தான் மலிகடனஞ் சுண்டவன்றுட்
டண்ணம் புயத்தான் றலம். (௧௫)

போற்று கலியர் முனம் பொங்குசெந்நீர் நெய்விளக்கி
லூற்றுதற்கு முன்னருள்செ யொற்றியே-மாற்றுவனே
வேதம் பலத்தையன் பெற்கருள்வான் வெம்புலிபாம்
போதம் பலத்தைய னூர். (௧௬)

நற்கரும்பாய்ப் பேய்க்கரும்பு நண்ணவுயர் பட்டணத்தா
ரொக்க வுளமகிழு மொற்றியே—யக்கமதாய்
மன்னியக ளங்கல் வளரழல்வெய் யோன்கங்கைச்
சென்னியக ளங்கன் செகம். (௧௭)

துள்ளுமதி வேணியராற் சுந்தரனார் சங்கிலியை
யுள்ளன் பொடுபுணர்ந்த வொற்றியே—யொள்ளியநற்
பாதம் பணிவார் பலமொழிப்பர் மாயவனன்
றோதம் பணிவா ருலகு. (௧௮)

பூதலமும் பாதலமும் பொன்னாடு மெங்கானு
மோத மனஞ்சலியா வொற்றியே—போதன்முடி
முத்தலைவேற் கையனார் மோகம்விளை மாதர்மனம்
வைத்தலைவேற் கையனார் வாழ்வு. (௧௯)

குட்டங்கா மாலைவலி குன்மஞ் சுரப்பிணியி
னுட்டணமே யாதருளு மொற்றியே—கட்டயங்கும்
பூவா சனத்தன் புகழ்பரம னன்பரக
மீவா சனத்தன் விருப்பு. (௨௰)

மாங்குயிலும் வண்டினமும் வந்தொலிக்க மாமயிலு
மோங்கிநட மாடுபொழி லொற்றியே—பூங்கொடியார்
அஞ்சக் கரத்தா லலையாதன் பார்க்க[illegible]ளும
அஞ்சக் கரத்தா னகம். (௨௧)

நம்பர்விழா வென்றுரைத்து நாகமார்ந் தாடுகொடி
யும்பரை யழைப்பதொக்கு மொற்றியே—நம்பியரை
போற்ற வழக்கிட்டார் போதன்மாற் கன்பரின்பம்
போற்ற வழக்கிட்டார் பூ. (௨௨)

பண்டுநெய்ப ருப்புடனே பட்சணங்கள் சததிரத்தி
னுண்டுமகிழ் வாருலகோ ரொற்றியே—வெணடுங்
கனகமலை வில்லாக் கழலா லழுத்துங்
கனகமலை வில்லான் களிப்பு. (உ௩)

நேசமுட னேகிள்ளை நீள்சொடிமே னின்றாட
னூசலென வேயொக்கு மொற்றியே—வீசுமுயர்
சங்கக் குழையார் தசமுகனால் வெள்ளிவெற்ப
சங்கக் குழையார் தலம். (உ௪)

கச்சார் முலையாரெக் காலத்தும் பிச்சையிடு
முச்சாக மேயடைவா ரொற்றியே—நச்சாருங்
கண்டத் தரத்தர் கமலன்மாற் காண்டரும
கண்டத் தரத்தர் களிப்பு. (உ௫)

பேசருநல் லோரேத்தும் பேரொலிசேர் வாத்தியத்தி
னோசையினைத் தாழ்ந்துமுய ரொற்றியே—மாசகன்ற
மாமன் றலையரிந்தார் வன்னியிண்டைச் சேகரத்தார்
மாயன் றலைபரிந்தார் வாழ்வு. (உ௬)

துள்ளிவரும் வானரங்க டேம்மணியைத் தீயென்றே
யுள்ளமையங் கொண்டகலு மொற்றியே-வெள்ளிவரை
அம்பகவ னாத னழற்சூரி யன்மதியார்
அம்பகவ னாத னகம். (உ௭)

சீர்பிணைவே ழத்தைச் சினந்தகலச் சிங்கமிரு [துக்
ஓர்பிணக்கைத் தீர்த்துவைக்கு மொற்றியே—பார்பறித்
காலங் களித்தார் கருணையுடன் மாற்குப்பின்
காலங் களித்தார் களிபபு (உ௮)

கோதற்ற சொற்கிள்ளை கொக்கினங்க ளோடமுத்தா
லோதத் திரையெறிக்கு மொற்றியே—வேதத்தைச்
சொன்னவரங் கத்தைய னாயகந்திக் காய்நடித்த
சொன்னவரங் கத்தையர் தோய்வ (உ௯)

மொய்யா மலாககாவின் மோகமனாளை யாடவெதி
ரொய்யாரங் காட்டுமந்தி யொற்றியே—மையாக

சத்த விடங்கரத்த ரோங்கியகண் டத்தரானார்
சத்த விடங்கரத்தர் சார்பு. (௩0)

நற்றாளம் வேய்த்தாள நண்ணுமொளி சூரியனு
ருற்றவொளி யைத்தாழ்த்து மொற்றியே-குற்றமறத்
தாம்பணிவா ரத்தத்தர் தன்மையையீ வானுசுப்பில்
தாம்பணிவா ரத்தத்தன் சார்பு. (௩௧)

புள்ளார் தமைப்பொழிலிற் பூவைபுறு மக்கண்டங்
குள்ளா னகைத்தோங்கு மொற்றியே—யுள்ளார்ந்த
கந்தருவ ரங்குழையா காமற்செயக்காதிற்
கந்தருவ ரங்குழையார் காப்பு. (௩௨)

நாணுமற் சோலையினி னண்ணுமந்தி கட்செவிபென்
றோணுனைக் கண்டோடு மொற்றியே—நீணாகந்
தாவில்லா ரத்தர் தபனநிற மெய்யத்தர்
தாவில்லா ரத்தர் தலம். (௩௩)

சித்தத்தெங்நாளுஞ்சிவநாம மேத்துகின்ற
வுத்தமர்கள் வாழுஞ்சீ ரொற்றியே—வத்ர
கரடக் கயத்தன் கடம்பன்றன் றாதைக்
கரடக் கயத்தன் களிப்பு. (௩௪)

சங்கினங்க ளீன்ற தரளத்தை யண்டமென்ன
வுங்கெழில்வெண் கொக்கணைக்கு மொற்றியே-துங்கமத
வேடரா நின்றவனும் வெந்திர்ப்பா னர்ச்சுனன்முன்
வேடரா நின்றவனார் வீடு. (௩௫)

மன்னுசான் றோர்சோலை மஞ்சனதி ரீசனார்க்
குன்னுகீழ்ப் பாலமரு மொற்றியே—மின்னுபத
நற்றவள மெய்யார் நல்த்தோர்காண் டற்கரிய
நற்றவள மெய்யார் நகர். (௩௬)

நீடியத டத்தணங்கார் நீராடும் போதுகையென்
றோடிமல ரைப்பிடிக்கு மொற்றியே—வாடியுளம்
பாலனையக் கண்டனத்தம் பண்ணையமனைச்செற்றான்மெய
பாலனையக் கண்டனத்தன் பற்று. (௩௭)

தேங்கமழ்க்கா விற்பூவுந் தேனுடனே மாரியென
வோங்கமிக வேசொரியு மொற்றியே—தாங்கு
மரவிந்தக் காலத்த னாகமசைத் தாம
மரவிந்தக் காலத்த னார்பு. (௩௮)

வம்பவிருங் காவனத்தில் வன்சிங்கந் தன்னைப்பார்
தும்பலோ டாது மழு மொற்றியே—யும்பர்
வருத்த மகத்தன் மனமகிழ்வோர் வேயி
வருத்த மகத்தன் மனை. (௩௯)

தண்டலையைப் பாய்ந்தாவி தன்னிலலர்த் தேன்வாளை
யுண்டிறுமாப் பாரத்துவள மொற்றியே—திண்டிம்பந்
தாநந் தருந்துனலர் தமமைவிண்ணோர் யாவுமுய்யத்
தாநஞ் சருந்துனலர் சார்பு. (௪௰)

---

மாமறையோர் செய்யு மணவாளர்க் கேந்திழையா
ரோமந் தரியாத மொற்றியே—பூமங்கை
மங்கலிய நாட்டவனார் மாநஞ்சுண் டண்மைதனங்
கங்கலிய நாட்டவனார் காட்பு. (௪௧)

செஞ்சொலார் தென்மேற் றிசைவாணி தென்குணத்தி
னுஞ்சலசைப் பாராகு மொற்றியே—வெஞ்சமனசேர்
கால மறிக்கையான காட்டிப்புனங் காப்பவன்றீச்
சூல மறக்கையான மேருய்வு (௪௨)

சீர்தரும்பார்ப்பார்மறையைச்செங்கன்னற்சோலைகள்விண்
ணோர்தலத்தைக் கண்டுவக்கு மொற்றியே—யீர்தெண்
மதியரா வந்தார் மவுலியார் பெண்முன்
முதியரா வந்தார் முகம். (௪௩)

வேதந் தமைமறையோர் வேலைமருங் கார்வலையோ
ரோதந் தமக்கஞ்சா ரொற்றியே—பூதஞ்சூழ்
மைமக்கான கத்தான் மலரோனற சானனமெல்
கைக்கான கத்தான் களிப்பு. (௪௪)

அம்பிடிவே ழத்தின்மு னன்பரன்மேல் வைத்தவருக்
கும்பலித மேவுஞ்சி றொற்றியே—செம்பதமாம

போதினிலா ரததனை புகழ்தருவா னங்கயற்கண்
மாதினிலா ரத்தன் மனை. (௪௫)

போதிலுற வண்டினமும் போற்றிப் பணிவோர்க்கவ்
வூதியம்பொன் றுதவ ளொற்றியே—தீதி
லிசைத்தலைவ னேச னெக்கியா னுத்ர
திசைத்தலைவ னேசன் செகம். (௪௬)

தெட்கயத்தி னீரின் றிருவீதி யிற்பசிதா
முட்கமட மோங்கிவரு மொற்றியே—யுட்கருத்தின்
மாறுதலை யத்தன் மயமொழிப்பா னம்புவியக்
காறுதலை யத்த னகம். (௪௭)

சங்குதரு முத்தினமுந் தண்மறுகி லாடவர்க
ளங்குதிரை மேலவிரு மொற்றியே—திங்களங்கி
சூரியக ணத்தர் சுடலையுழற் பாரிடமாஞ்
சீரியக ணத்தர் செகம். (௪௮)

நீடுற்ற சோலைகட்கு நோய்ப்பூ வின்றிக்கு
மோடிக் களவமன்னு மொற்றியே—பாடேன்
குதலைத்தா மத்தன் குறையறவே கொண்டருள்வான்
மதலைத்தா மத்தன் மனை. (௪௯)

அத்தரடி யேத்தமண மம்புவியியோர்க் கந்தணரா
முத்தமர்க ளிக்தனிவி ரொற்றியே—முத்தவிருஞ்
சோதிக் கழைக்குமரன் றொண்டனைநல்வீ டென்னு
மாதிக் கழைக்குமர னூர்வு. (௫௰)

நீடரவைக் கண்டுமெங்கு நேர்ந்தசெல்வர் நீர்க்கயத்தி
னோடத் துளிவருஞ்சீ ரொற்றியே—நீடினர்சேர்
சிதக் கழலான் செயப்புயத்துங் கையகத்து
மீதக் கழலான் விருப்பு. (௫௧)

செங்கெல்வயற்றன் னிலன்பர்சிற்பரனைப்போற்றுகின்ற
வுன்னதத்தை மன்னுஞ்சீ ரொற்றியே—வன்னசவ
மாதாக மத்தன்மழுமான் றிகழத்தன்
வேதாக மத்தன் வியப்பு. (௫௨)

கந்தமலர் வாவிதிரை கண்களிக்கச் சேர்வாண்ப
ருந்தவரு மானந்த மொற்றியே—சுந்தரியோர்
பங்கார கத்தன் பரமன் சுரத்தின்மா
ணங்கார கத்த னகம். (௫௩)

நீடிவரு மாகத்து நீங்காது மந்திவினாங்
தோடிக் கொடித்திகழு மொற்றியே—தோடுகஞ்சன்
காயங் கறுத்தவனார் கண்டேத்த வன்னோர்தங்
தீயங் கறுத்தவனார் சேர்வு. (௫௪)

போதச்சீர் யாகத்திற் பூசுரர்கள் வேதநந்த
மோதத் தியங்கிவரு மொற்றியே—தீதின்
படித்தான் மலைத்தலைவன் பாவியெனைக் காக்கு
நொடித்தான் மலைத்தலைவ னோக்கு. (௫௫)

மோதந் திரைக்கடலின் மூக்கணன்கோ டாத்தி
லோதம் பாவிவரு மொற்றியே—பூதலத்தைத்
தந்தகற்பி னாகத்தர் சக்கரனா ரம்புக்க
ணந்தகற்பி னாகத்தர் நாடு. (௫௬)

தெட்கயத்து வெம்புலிகள் சேணுற்ற மேகத்தி
னுட்கமுகந் தானுன்னு மொற்றியே—கட்கமலத்
தான்றனித்தேர்ப் பாகன் சரமாலி லாமலுமை
மான்றனித்தேர்ப் பாகன் மனை. (௫௭)

கள்ளமற வேயையங் கந்நியர்க ளன்பர்துதி
யுள்ளங்கை யாரவரு மொற்றியே—யுள்ளத்திற்
கோளூ ரினத்தர் குலத்தணுகார் புள்ளிருக்கும்
வேளூ ரினத்தர் விருப்பு. (௫௮)

பூங்கொடியார் தம்புருவம் புங்கவர்க்குச் சான்றூர்க்கா
வோங்கிவரு மஞ்சனமா ரொற்றியே—தீங்கவிருஞ்
சங்கரவத் தாரார் தயாநிதியர் திண்புயத்திற்
பொங்கரவத் தாரார் புரி. (௫௯)

தண்ணுற்ற வாவியின்றன் சத்திரத்திற் போசனங்க
ளுண்ணத் தியங்குஞ்சீ ரொற்றியே—வெண்ணிடபஞ்

சீரூர்தி யாகத் திசைமுன்மா லேத்துகின்ற
வாரூர்தி யாக னகம். (௬௰)

---

வித்தகனை யன்பருள்ள மேலோர் மதியருகி
லுத்தியா னாதுன்னு மொற்றியே—நித்தமுந்தான்
கோதினா கத்தர் குவலயமா மூத்தருன்னுங்
காதினா கத்தர் களிப்பு. (௬௧)

செம்பொன்வா யிற்படியிற் சீர்மணமுன் விதியிற்று
வும்ப ரியங்குலவு மொற்றியே—யம்புயனுஞ்
சங்குசக்க ரத்தரத்தர் சாற்றுமையர் பாசமுட
னங்குசக்க ரத்தரத்த ரார்வு. (௬௨)

மாவியன்மா டங்கடொறு மானிலத்தர் வாத்தியங்க
ளோவியந் துன்னுஞ்சி ரொற்றியே—பாவந்
துடைப்பா ரிடத்தார் துலங்குமையர் சொந்தப்
படைப்பா ரிடத்தார் பதி. (௬௩)

மாசகன்றோர் வாய்டிகள் வன்புலிமே லாத்தடமு
மோசை வலங்காட்டு மொற்றியே—கேசவனார்
தம்மா விருக்குமயன் சாற்றறியா னால்வருக்கா
யம்மா விருக்குமய னார்வு. (௬௪)

தீங்கறுநன் மாடங்கள் செய்யிடஞ்சிங் கத்தின்மே
லோங்கலங்கா ரந்தருகு மொற்றியே—தீங்கதனி
னண்ணா மலைய னலமெனக்கீ வான்சிறந்த
வண்ணா மலைய னகம். (௬௫)

துள்ளாகிற் குங்குரங்கு துங்கம்பொய் யாப்பொழிலி
லுள்ளானைத் தாவிவரு மொற்றியே—யுள்ளிக்
கருது மடியான் களிக்க நமனைப்
பொருது மடியான் புவி. (௬௬)

பத்தர்வாய் நந்தியர்தாம் பாவையங்க நாதருந்தா
வுத்தரமா மேற்றிசையா ரொற்றியே—நித்தமுமேத்
தெஞ்சார் திருக்கண்ட வில்லா தவர்க்கருளு
நஞ்சார் திருக்கண்டர் நாடு. (௬௭)

துட -ருளம் பேரிகைத்தாங் தூய்மறுகில் வேந்தர்களு
மொட்டகத்து மேலவிரு மொற்றியே—யெட்டென்னு
மோதக் கரவத்தா ருந்திவந்தார் மார்பகத்தின்
மீதக் கரவத்தார் வீடு. (சுஅ)

பாங்கவிர்க்கா விண்மறுகில் பத்தருளத் தக்காமா
மோங்கலநதஞ் சாருந்த ணொற்றியே—நீங்கலிலாப்
பூதப் படையான் புகழன் பணைக்கருவிற்
போதப் படையான் புரி. (சுகூ)

துன்னூர்தந் தீமையோர் தோன்றலா னற்சித்தி
யுன்னூரு நட்டஞ்சே ரொற்றியே—யெந்நாளும்
பூசித்த லத்தம் பொலிச்சங்க மாலகலாக்
காசித்த லத்தன் களிப்பு. (எ0)

விண்கார ளாவிவா வித்துறையில் காரியென்போ
ரொண்கா வனங்கயங்கு மொற்றியே—தண்காசி
மானகரி னத்தன் வயங்கியகண டந்தன்னி
லானகரி னத்த் னகம். (எக)

நண்டா மரையிலனந் தற்சிரன் பர்க்கணங்கோ
டொண்டா தியங்கிவரு மொற்றியே—திண்டாவு
மெண்புயததி ஞாத்த மேந்திழையார் பாலனூண்
பண்புயததி ஞரத்தர் பார். (எஉ)

சீதமலர் வாவியினிற் றேன்மொழியார் தண்காவி
லோதிமங் குலாவிவரு மொற்றியே—மாதவனும்
பெற்றத் தரத்தர் பெருமம் பிடக்கையத்தர்
நற்றத் தரத்தர் நகர். (எங)

அமபுயத்தை வாவியினி லாலையத்துங் காவிறத்தை
யும்பருந தியங்கிவரு மொற்றியே—செமபொன்
வனசக் கழலார் மதவேளைத் தீய்த்த
கனசக் கழலார் களிப்பு. (எச)

சூதத் தளிரனைய தூய்பொழிலிற் கந்தருவ
ரோதியரா கம்பொலிசே ரொற்றியே—சோதிதரு

மங்கா தரவத்தரம்புயத்தன் காண்பரிய
கங்கா தரவத்தர் காப்பு. (எரு)

நன்னயமா முத்தார நங்கையுரம் வாவியின்க
ணுன்னத் தனமெய்து மொற்றியே—சொன்னநிற
சேவடிக்கும் பிட்டார் சிறுமைதவிர் பார்வந்தி
மாவடிக்கும் பிட்டார் மனை. (எசு)

நீடுபொழின் மந்தியன நேர்ந்துபெடை யின்கரையை
யோடி யலைக்கவரு மொற்றியே—நாடியதன்
வாட்பங்கை யத்தன் வரைமகளு மைக்கீந்தோன்
றாட்பங்கை யத்தன் றலம். (எஎ)

இச்சையினோ டன்பரின்கோ யின்மாகத்தாமைகைக்கா
லுச்சிகரந் துன்னுஞ்சி ரொற்றியே—நச்சின்
மிடற்றா னயனத்தன் மேவறியான் செந்தீ
யடற்றா னயனத்த னூர்வு. (எஅ)

செப்பருங்கீழ்ப் பால்வீதி சித்திரங்க ளுய்த்துயர்ந்த
வுப்பரிகை யீந்துன்னு மொற்றியே—தப்பின்
றிருவடிவார் மாதங்கர் சிந்தித் திடுவோர்
மருவடிவார் மாதங்கர் வாழ்வு. (எசு)

மன்னுமயன் யோகத்தி மாதவத்தோர் பெண்டிலக
முன்னுதலங் காட்டுகின்ற வொற்றியே—துன்னித்
திவளக் கயிலாய சேங்கனலி மானூர்
தவளக் கயிலாயர் சார்பு. (அ0)

மாதங்க வத்திரத்தான் மன்னு கிவரலா
லோதைங் கரன்செல்வ ரொற்றியே—வேதியனைக்
கூப்பிட்டு மென்றாள் குலவவருள் வோனவந்தி
மாப்பிட்டு மென்றான் மனை (அக)

கம்மாறு னந்தங் களங்கந்தர் தீரமே
வும்மாழ் கயங்கடம்ப னொற்றியே—செம்மார்
கருதங்க மானூர் காதலத்திற் சூல
மிருதங்க மானூர் வியப்பு, (அஉ)

மாதரணி பூக்தெழிலான் மாக்களுறக் கார்த்தகையா
லேதரிய காவுமைநே ரொற்றியே—பேதமறச்
சந்தப் பரவையினுர் தன்னிடஞ்சென் ருேர்முடியி
லிந்தப் பரவையினு ரில். (அங)

சங்கொளிர்வட் டந்திருக்கோ தண்டத்தைத் தாங்குதலா
லுங்கண்ண னேர்வாவி யொற்றியே—துங்கருள
மன்னவே தத்த மனப்படிநேர் வேனென்று
சொன்னவே தத்தன் சுகம். (அச)

தாவுகலை வாணிவந்து தாரணியைத் தந்திடலா
லூவுத்தி யானமய னொற்றிய—மேவலகை
யாம்புடையா ரத்த னகமகிழ்ந்தோன் மாமலரோன்
தாம்புடையா ரத்தன் சுகம். (அரு)

சேரப் பணிந்து திருவலர்சிந் திக்கப்பா
ரோரொப்பா குஞ்சோலை யொற்றியே—காருமெனை
யென்ருேர்க்கு மைய மிலாதேத்து ஞானியரு
ணின்ருேர்க்கு மைய னிலம். (அசா)

மாவெண் கரியுந்தா வச்சிரம சைத்தகையா
லீலாவெங்கா டிந்திரனே ரொற்றியே—நாவுச்
சரிப்போர்வை யத்தர் தமக்கருள்வோர் மாத்தோ
றரிப்போர்வை யத்தர் தலம். (அஎ)

வெம்மையுற்று மத்தந்தா மேவாநின் றேதாவி
டும்மிதயா னைத்தீயா மொற்றியே—செம்மைப்
பொருத்த மொழிப்பார் புகன்றுபணி வோர்தம்
வருத்த மொழிப்பார் மனை (அகூ)

தாவுமே திக்குலவத் தண்கடைவாயப பலலவக்கா
வோவந் தகனேரா மொற்றியே—பூவுலகும்
வானுடு னல்விடைய மன்ன வருடிருமான்
மேனுடு னல்விடையன் வீடு. (அகூ)

வண்டிண் டிகைமேலா வாசமனைத் தீர்க்கைத்தே
னுண்டலர்பூ வாநிருதி யொற்றியே—கண்டமினிர்

நஞ்சே காத்த கலைமானார் திங்கட்பாம்
பஞ்சே கரத்த னகம். (௬௰)

கொற்றவிலங் காரிகையாற் கொண்முதலை மேலுமவ
னுற்றபொரு ளாம்வருண னொற்றியே—நற்றிருமால்
வேதியனா கத்தனார் மேவம்பு சாரதியார்
காதியனா கத்தனார் காப்பு. (௬௧)

கூறுங் கலைபுணர்மி குந்துசந்தி ருப்புகையா
லூறுங் கடற்காற்றூ பொற்றியே—சீறுமடற்
பன்னாக யாலையத்தர் பத்தருளங் கண்டேத்தும்
பொன்னாக மாலையத்தர் பூ. (௬௨)

வண்டனங்கண் மேவி வளர்முடக்காற் றுமறைநா
மொண்டனத னொப்பாகு மொற்றியே—புண்டிடுவே
னென்று வருந்தினா விற்சுவைக்க வெச்சிலினான்
மென்று விருந்தினார் வீடு. (௬௩)

மன்னுமுய லாசை மனையங் தரியாக
முன்னுநல ரீசான்ய னொற்றியே—பொன்னுலக
மேல வருக்கத்தன் வியனாற்கீ ழிற்சனக
நால வருக்கத்த னகர் (௬௪)

ஆர்பல்ல வந்தா னடர்வானை மேவுதலா
லோர்பகல வன்காவா மொற்றியே—சீர்பரவு
வெள்ளியம லைக்கத்தன் மேதினியெ லாந்தந்த
தெள்ளியம லைக்கத்தன் சேர்வு. (அ௫)

தண்கதிர்க ணாடோறுந் தான்வளர நந்தேய
வொண்கலைநே ருங்கழனி யொற்றியே—வெண்கமட
மக்கர் வனத்த னகன்றடைந்து போற்றிடுஞ்சீர்
செக்கர் வனத்தன் செகம். (௬௬)

வண்டிரவி டந்தான் மலர்ப்பாங்கின் வாளினா
லொண்டிரக்காக் கும்பனே ரொற்றியே—திண்டோட
புரளக்கண் டத்தார் புரந்தரன்மால் வேதன்
காளக்கண் டத்தார் களிப்பு. (௬௭)

சங்கடங்க ளீரந் தயங்கலேசே ரத்தொண்ட
ருங்கடலி னோராகு மொற்றியே—சங்கன்
அயனாக குளத்தா ரவிர்புயத்தர் வெந்தி
நயனக் குளத்தார் நகர். (௯௮)

வையம் பலரு மகிழ்ந்துவந்து தேர்கொள்ளலா
முய்யுமே லோர்மதனு மொற்றியே—வெய்ய
சதிராக வந்தான் ஆனைபுரத்தைத் தீக்க
வெதிராக வந்தானிடம். (௯௯)

முத்தாரங் கற்புரமு மொய்வளைக ளார்ந்திடுமி
ஞைத்தாரு மங்காடி யொற்றியே—முத்தாக்கள்
வெம்பான திக்குடையார் மேன்மையுறத் தானளிப்பார்
சம்பான திக்குடையார் காப்பு. (௧௦௦)

முற்றிற்று.